பா.ஜ.க.வின் வேலையே – ஒவ்வொரு மாநிலக் கட்சியையும் விழுங்குவதுதான்!

‘அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்பதை எடப்பாடி பழனிசாமி, ‘அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்று பெயர் வைத்துவிடுவார்!

திட்டக்குடியில் நடைபெற்ற கழக சார்பு அணிகள் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

கடலூர், மார்ச் 12

கடலூர் மாவட்டம், திட்டக்குடியில், கடலூர் மேற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர், விரைவில், எடப்பாடி பழனிசாமி அவர்கள் கட்சியின் பெயரில் இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணாவின் பெயரை எடுத்துவிட்டு, ‘‘நாங்கள் அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம்’’ என்று வைத்துவிடுவார்’’ என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த சார்பு அணி நிர்வாகிகளான உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நேற்று முன்தினம் திருச்சியில் ஒரு மிகப்பெரிய கழக மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம். இங்கு வந்திருக்கக்கூடிய பலரை நேற்று முன்தினம் அந்த மாநாட்டில் நான் நேரடியாகவே சந்தித்தேன். இன்று மீண்டும் உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த வாய்ப்பைக் கொடுத்த நம் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அண்ணன் கணேசன் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகத்துக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் கோட்டை

இந்த கடலூர் மேற்கு மாவட்டம், என்றைக்குமே ‘கழகத்தின் கோட்டை’ என்று சொல்கின்ற அளவுக்குச் சிறந்த மாவட்டம். இந்த கடலூர் மேற்கு மாவட்டம், தொழில் வளர்ச்சியில், விவசாயத்தில், இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், அரசியலில் மிகவும் துடிப்பான ஒரு மாவட்டம். இன்று நம் இயக்கத்துக்கு வயது 76. பவள விழாவைத் தாண்டி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். 76 வயதான பிறகு இன்றும் அதே இளமையோடு பல அடக்குமுறைகளை, ஒடுக்குமுறைகளைத் தாண்டி நாம் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம் என்றால், உறுதியோடு, மிடுக்காக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய கழகத்தின் உடன்பிறப்புகள் உங்களின் உழைப்புதான் அதற்கு மிக மிக முக்கியமான ஒரு காரணம்.

எந்தச் சூழலாக இருந்தாலும், எந்தக் காலத்திலும் நம் தலைவருக்குப் பக்கபலமாக நீங்கள் அனைவரும் உங்களின் ஒத்துழைப்பைக் கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள். எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்திப்பது என் வழக்கம். அப்படி இருக்கும்போது தலைவர் அவர்கள்தான், “நீ ஏன் எந்த மாவட்டத்துக்குப் போனாலும், இளைஞர் அணியை மட்டும் சந்திக்கிறாய், மற்ற அணிகளையெல்லாம் சந்திக்கக் கூடாதா, சார்பு அணிகளையும் நீ சந்திக்க வேண்டும்” என்று தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று, இன்று இப்போது நான் சந்திக்க வந்திருக்கிறேன்.

மிகப்பெரிய ஒரு பெருமை

உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன் என்றால், நம் தலைவருக்கு ஒரு மிகப்பெரிய ஒரு பெருமை உண்டு. அவர் தலைவராக இந்த இயக்கத்துக்குப் பொறுப்பேற்ற பின்பு, நாம் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றியை மட்டுமே பெற்றிருக்கிறோம். அந்த வெற்றியைக் கொடுத்தது, இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்களும், நீங்கள் இடம் பெற்றுள்ள சார்பு அணிகளும்தான். உங்களின் உழைப்பு அந்த வெற்றிக்கு மிக மிக முக்கியமான ஒரு காரணம்.

யூத் விங், ஸ்டுடண்ட்ஸ் விங், ஐ.டி விங், விமன்ஸ் விங் என்று சொல்கிறோம். மொத்தம் 25 அணிகள் (25 விங்ஸ்) நம் இயக்கத்துக்கு இருக்கின்றன. அணிகளையெல்லாம் ஆங்கிலத்தில் ‘விங்ஸ்’ என்று சொல்வார்கள். தமிழில் ‘சிறகுகள்’ என்று சொல்வார்கள். இன்று நம் கழகம் வெற்றி மேல் வெற்றிபெற்று உயர உயரப் பறந்து கொண்டு இருக்கிறது என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய உங்களின் உழைப்பு மிக மிக முக்கியமான ஒரு காரணம்.

பயிற்சிக் களத்தில் வலைப் பயிற்சி

எந்த அணி சிறப்பாகச் செயல்படுகிறது, எந்த அணியில் எந்த நிர்வாகி சிறப்பாகச் செயல்படுகிறார், எந்த அணியில் யார் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்கிறார்கள் என்று தலைவர் அவர்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டே வருகிறார்கள். அதனால்தான் நான் பலமுறை சொல்வதுண்டு, தாய்க்கழகத்தில் பணியாற்றுவதற்கு இந்த அணிகளில் பணியாற்றுகின்ற இந்த நேரம் கிட்டத்தட்ட ஒரு பயிற்சிக்களம் போன்றது. எடுத்தவுடனேயே முக்கியப் போட்டியில் சென்று விளையாட முடியாது, அதற்குச் சிறிது நேரம் வலைப்பயிற்சி கொடுத்துப் பார்ப்பார்கள். அதுபோல அணிகளில் நம் செயல்பாட்டைப் பார்த்து நம் தலைவர் அவர்கள் நமக்கு பதவி உயர்வு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இன்று தாய்க்கழகத்தில் இருக்கக்கூடிய பல பேர் சிறப்பாக அணிகளில் செயல்பட்டவர்கள்தான். அப்படிச் செயல்பட்டுத்தான் இன்று மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களாக, மாவட்டக் கழகச் செயலாளர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, மேயர்களாக, துணை மேயர்களாக இன்னும் சொல்லப்போனால் மிகவும் பெருமை என்னவென்றால் தமிழ்நாட்டுக்கு முதலமைச்சரைக் கொடுத்தது தி.மு.கவின் இளைஞர் அணி என்று சொன்னால், அது மிகையாகாது. கழகத்தின் பொதுச் செயலாளரைக் கொடுத்தது கழகத்தின் மாணவர் அணி. இப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு உண்டு.

அதனால்தான் சார்பு அணி என்று நாம் யாரும் மிகவும் மெத்தனமாக இருந்திடக் கூடாது. சார்பு அணி என்றால், தாய்க்கழகத்தின் மேல் நாம் சார்ந்து இருக்கவில்லை. தாய்க்கழகம்தான், நம்மைச் சார்ந்து இருக்கிறது என்கிற அந்த நிலையை இங்கு வந்திருக்கக்கூடிய சார்பு அணிகள் உருவாக்கிக் காட்ட வேண்டும்.

நிச்சயமாக உங்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன், நம் உழைப்பைச் சரியாகக் கொடுத்தோம் என்றால், தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் சரியான அங்கீகாரத்தை, அது யாராக இருந்தாலும் நிச்சயம் உங்களுக்குக் கொடுப்பார்கள். அந்த உறுதிமொழியை நான் உங்களுக்குத் தருகிறேன். அதனால், இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல், களப்பணியில் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

960 கோடி பயணங்கள்

ஒருசில திட்டங்களை மட்டும் இங்கு நான் உங்களுக்கு நினைவுகூர விரும்புகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் நம் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். மகளிர் விடியல் பயணத் திட்டம். ஆட்சிப் பொறுப்பேற்று நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுத் தலைவர் இட்ட முதல் கையெழுத்து, மகளிர் விடியல் பயணத் திட்டம். இன்று அந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட 960 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இன்று பலர் தேர்தல் வாக்குறுதி கொடுக்கிறார்கள், எல்லாம் இது நம் தேர்தல் அறிக்கையை அப்படியே நகல் எடுத்து பெயரை மட்டும் மாற்றி மாற்றிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் அன்றைக்கு மாநாட்டில் தலைவர் பேசும்போது சொன்னார்கள், “இனிமேல் நான் அறிவித்த திட்டங்கள் எல்லாம் இருக்கும் வரை, இந்த தமிழ்நாட்டை ஆளுவது ஸ்டாலின்தான்” என்று நம் தலைவர் அவர்கள் தெம்பாகச் சொன்னார்கள் என்றால், நம் திட்டங்கள் அவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்று இருக்கின்றன.

20 லட்சம் குழந்தைகள்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். இன்று ஒவ்வொரு குழந்தையும் காலையில் எழுந்து சென்றவுடனேயே பள்ளிக்கூடத்தில் சிறந்த கல்வி, அதற்கு முன்பு சிறந்த காலை உணவு. ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

மாணவிகள் உயர்கல்வி படிக்க வேண்டும், அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்குத் தமிழ்ப்புதல்வன் திட்டம். கிட்டத்தட்ட இரண்டும் சேர்த்து 13 லட்சம் மாணவ மாணவிகள் இந்தப் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். கல்வி ஊக்கத்தொகையாக 1,000 ரூபாய் நம் அரசு வழங்கி வருகின்றது.

இன்று 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினியை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மகளிர் உரிமைத் தொகை

எல்லாவற்றையும்விட மிக மிக முக்கியமான ஒரு திட்டம், தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன வாக்குறுதி, நம்மால் செய்யமுடியாது என்று எதிர்க்கட்சிகள் சொன்ன வாக்குறுதி. அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். கடந்த மூன்று ஆண்டுகளாக நம் தலைவர் அவர்கள் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கடந்த பிப்ரவரி மாதம் நம் முதலமைச்சர் அவர்கள் மிகப்பெரிய ஒரு வியப்பை கொடுத்தார். மகளிருக்கு வியப்பு, எதிர்க்கட்சிகளுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி. பல மாநிலங்களில் இதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். சட்டமன்றத் தேர்தல் வருகிறது, இந்தத் திட்டம் மகளிர் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று இருக்கிறது என்று இதை எப்படியாவது முடக்க வேண்டும், இந்த உரிமைத் திட்டத்தை எப்படியாவது மூன்று மாதத்துக்கு முடக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சதித் திட்டத்தில் ஈடுபட்டார்கள். இதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால், இதைத் தெரிந்துகொண்டு நம் தலைவர் அவர்கள் இப்போது மூன்று மாதத்துக்கும் சேர்த்து 3,000 அத்துடன் கோடைக்காலச் சிறப்பு நிதியாக 2,000 என 5,000 ரூபாய் ஒரே கையெழுத்தில் ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்கள். இதையும் மீறி, இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கின்றார், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை உயர்த்தி, 2,000 ரூபாயாகக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியையும் நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மக்களைத் தேடி மருத்துவம்

இதுபோன்று எத்தனையோ திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள். ‘இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48’ போன்ற ஒரு திட்டம். ‘மக்களைத் தேடி மருத்துவம்’ என்று ஒரு திட்டம். இந்த ஐந்து ஆண்டுகளில் 24 லட்சம் பேருக்குப் பட்டா கொடுத்திருக்கிறது நம் அரசு. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

சென்ற வாரம் நம் முதலமைச்சர் அவர்கள் “உங்கள் கனவைச் சொல்லுங்கள்” என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். கல்வி, தொழில் வளர்ச்சி, அடிப்படைக் கட்டமைப்பு, விவசாயம் ஒவ்வொன்றிலும் 2030 ஆம் ஆண்டிற்குள் அடுத்த கட்டத்துக்கு நான் தமிழ்நாட்டைக் கூட்டிச் செல்வேன் என்கின்ற வாக்குறுதியை நம் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முந்தைய ஒரு சில உதாரணங்களை மட்டும் சொல்கிறேன்.

1,180 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் தொழில் முதலீட்டிற்காகப் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எவ்வளவு தெரியுமா? சென்ற அ.தி.மு.க ஆட்சியில் 471. ஆனால், நம் அரசு இந்த ஐந்து ஆண்டுகளில் 1,180 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம்.

அதேபோல முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட சிப்காட் தொழிற்பேட்டைகள் எவ்வளவு தெரியுமா? வெறும் நான்கு. ஆனால் நம் இந்த ஐந்தாண்டு ஆட்சியில் 33 புதிய சிப்காட்டுகளை நம் தமிழ்நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்.

வேளாண் துறையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் 57 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பு அளவு இருந்தது. இப்போது அதை உயர்த்தி 62 லட்சம் ஹெக்டேராக உயர்த்தி காட்டியிருக்கிறது நம் அரசு. ஐந்து ஆண்டுகளில் 5 லட்சம் ஹெக்டேரை நாம் உயர்த்தி காட்டியிருக்கிறோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இலவச வேளாண் மின் இணைப்பு ஒரு லட்சம் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம் ஆட்சியில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பை நாம் கொடுத்திருக்கிறோம்.

இப்படிப் பல்வேறு திட்டங்கள். ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, வெளிநாடுகளிலும் படிக்க வேண்டும் என்ற அயலகத் திட்டம். இந்தத் திட்டத்தின் பெயரே ‘அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி வழங்குகின்ற திட்டம்’. இந்தத் திட்டத்தில் அ.தி.மு.க ஆட்சியில் பயன்பெற்ற மாணவர்கள் மொத்தம் இரண்டே பேர். ஆனால், நம் ஆட்சியில் 386 மாணவர்களுக்கு 160 கோடி ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இப்படி எத்தனையோ திட்டங்கள்.

கடலூர் திட்டங்கள்

குறிப்பாக இந்தக் கடலூர் மாவட்டத்துக்கு எண்ணற்ற திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் சுமார் 512 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 வீடுகள் இந்தக் கடலூர் மாவட்டத்துக்கு மட்டும் கட்டிக் கொடுத்திருக்கிறார் நம் தலைவர்.

480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெய்வேலி கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருமாள் ஏரி தூர்வாரப்பட்டிருக்கிறது. இதுபோன்ற அடுக்கடுக்கான திட்டங்களால்தான் இன்று நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

ஒன்றிய அரசு எந்த வகையிலெல்லாம் முடியுமோ அதற்கான சங்கடங்களை, இடையூறுகளை எல்லாம் நம் மாநிலத்துக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த நெருக்கடிகளையெல்லாம் சமாளித்து இன்று தமிழ்நாட்டை இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக நம் தலைவர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள்.

நம் கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள், நிதி உரிமையைப் பறிக்கிறார்கள், வாழ்வுரிமை ஒவ்வொன்றையும் முடக்கப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டுக்கென்று எந்த ஒரு திட்டத்தையும் கடந்த ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. ஒன்றிய பட்ஜெட்டை ஒன்றிய நிதி அமைச்சர் படிக்கஆரம்பித்தார்கள், படித்துமுழுமையாகக்கூட முடிக்கவில்லை. ஆனால், அதற்குள் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர், “ஒரு சிறந்த பட்ஜெட்” என்று பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார். அதுமட்டுமல்ல, கல்வி நிதி ‘புதிய கல்விக் கொள்கை’ என்று ஒரு திட்டத்தை சென்று ஆண்டு கொண்டு வந்தார்கள்.

மீண்டும் மும்மொழிக் கொள்கை

இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் இந்தப் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். ஒன்றிய அமைச்சர் சொல்கிறார், “நீங்கள் இந்தப் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒன்றிய அரசு வழங்கக்கூடிய நிதிப்பகிர்வைக் கொடுப்போம் என்று.

நம் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய நிதி இரண்டு ஆண்டுகளுக்குச் சேர்த்து கிட்டத்தட்ட 3,200 கோடி. ஆனால் இந்தப் புதிய கல்விக் கொள்கையில் என்னென்ன இருக்கின்றன? புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மீண்டும் மும்மொழிக் கொள்கை.

மீண்டும் தமிழ்நாட்டிற்குள்ளே இந்தியையும் சமஸ்கிருதத்தையும் எப்படியாவது திணிப்பதற்கான முயற்சி. இந்தப் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மீண்டும் தமிழ்நாட்டிற்குள்ளே நாம் ஒழித்த குலக்கல்வித் திட்டம் வரும். இதெல்லாம் வரும் என்பதால்தான் நம் முதலமைச்சர் சொன்னார், “3,200 கோடி அல்ல, நீ 10,000 கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் நான் எந்தக் காலத்திலும் புதிய கல்விக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன்” என்று சொன்ன ஒரே முதலமைச்சர், ஒரே தலைவர் நம் தலைவர்.

இன்று மற்ற மாநிலங்கள் இதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்றுக்கொண்ட மற்ற மாநிலங்கள் எல்லாம் இன்று அதைப் புரிந்துகொண்டு சொல்கிறார்கள், “ஆம், தமிழ்நாடு சொன்னது சரி, தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த முடிவு சரியான முடிவு” என்று.

இன்று ஒன்றிய அரசு எந்த முடிவு எடுத்தாலும், மற்ற மாநில முதலமைச்சர்கள் என்ன பார்க்கிறார்கள்? “தமிழ்நாடு இன்று என்ன முடிவு எடுத்திருக்கிறது, தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்றுதான் மற்ற மாநிலங்கள் பார்க்கின்றன. அப்படிப்பட்ட ஒரு இந்தியாவிற்கே ஒரு எடுத்துக்காட்டு முதலமைச்சராக நம் தலைவர் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு சிறப்பான ஆட்சியை நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

பா.ஜ.க.வுக்கு எரிச்சல்

நம் தலைவரின் வேலையே பா.ஜ.க போடுகின்ற எதிர்காலத் திட்டங்கள் அனைத்தையும் நம் தலைவர் அம்பலப்படுத்தி, அவர்களின் திட்டங்களை முறியடித்துவிடுகிறார். ஆரம்பகட்டத்திலேயே முறியடித்துவிடுகிறார். அதனால்தான் பா.ஜ.கவுக்கு நம்மைப் பார்த்து அவ்வளவு எரிச்சல். எத்தனையோ வகையில் ஏதாவது பழிவாங்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள்.

நாம் சார்பு அணிகள் கூட்டத்தை நடத்துகிறோம். தி.மு.கவின் சார்பு அணிகள் என்றால், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி. பா.ஜ.கவின் சார்பு அணிகள் என்ன? சி.பி.ஐ. (CBI), ஈ.டி. (ED), வருமான வரித் துறை (Income Tax), இப்பொழுது தேர்தல் ஆணையம் (Election Commission).

எப்படி தி.மு.க.வின் சார்பு அணிகள் நம் வேலையைச் செய்கிறோமோ, அதைப்போல பா.ஜ.கவின் சார்பு அணிகள் அவர்களின் தேர்தல் வேலைகளைச் செய்கிறார்கள். இப்போது சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி. இதை வைத்துதான் ஒரு கூட்டணியை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கூட்டணியில் இருக்கின்ற ஒவ்வொருவரைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னால், என்னென்ன பேசினார்கள் என்று உங்களுக்குத் தெரியும். ஒருவர் சொன்னார், ‘‘எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குக் கவுன்சிலர் ஆவதற்குக்கூடத் தகுதி கிடையாது’’ என்று சொன்னார். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். இப்போதுகூட இருக்கின்ற ஒருவர் சொன்னார், “அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதற்கு நான் தூக்கில் தொங்கலாம் என்று சொன்னவர்கள் இன்று கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்றால், அது ஒரு பொருந்தாக் கூட்டணி. வெறும் தேர்தலுக்காக வைத்திருக்கக்கூடிய ஒரு வணிக ஒப்பந்தம். எனவே, இதையெல்லாம் மக்களிடம் எடுத்துக்கொண்டு சென்று நாம் சேர்க்க வேண்டும்.

மிகச்சிறந்த முரட்டு அடிமை

இதையெல்லாம் பார்த்து யாருக்குக் கோபம் வர வேண்டும்? எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குக் கோபம் வர வேண்டும். ஆனால், அவர் கோபப்படுவாரா? அவருக்குக் கோபம் என்றால் என்னவென்று தெரியுமா? நான் அடிக்கடி சொல்வேன், முரட்டுப் பக்தர்களைப் பார்த்திருப்போம், முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்போம். இன்று இந்தியாவே ஒரு மிகச்சிறந்த முரட்டு அடிமையை எடப்பாடி பழனிசாமி உருவத்தில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு வாரத்துக்கு முன்பு, மதுரையில் கூட்டம் நடந்தது. பிரதமர் மோடி அவர்கள் வந்திருந்தார்.

நீங்கள் எல்லாம் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், செய்தித்தாளில் படித்திருப்பீர்கள். அந்தக் கூட்ட முகப்பில் தந்தை பெரியாரின் புகைப்படத்தை வைத்திருந்தார்கள். மோடி வருகிறார் என்று தெரிந்தவுடன் மோடி மனம் புண்பட்டுவிடக் கூடாது என்று பெரியார் படத்தை எடுக்கச் சொன்னார்கள்; எடுத்துவிட்டார்கள்.

பெரியார் படத்தை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் மோடியின் படத்தை வைத்தவர்கள்தான் இன்று இருக்கக்கூடிய அடிமை அ.தி.மு.க. கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இன்று இப்பொழுது செய்தித்தாளில் வந்திருக்கிறது, இப்பொழுது சமூக வலைதளங்களில் வந்திருக்கிறது,

இன்று மோடி அவர்கள் திருச்சிக்கு வருகிறார். என்ன தெரியுமா கொடுமை? எடப்பாடி பழனிசாமி புகைப்படத்தை எடுத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்று அ.தி.மு.க இருக்கிறது. விரைவில், எடப்பாடி பழனிசாமி அவர்கள் கட்சியின் பெயரில் இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணாவின் பெயரை எடுத்துவிட்டு, ‘‘நாங்கள் அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம்’’ என்று வைத்துவிடுவார். அவர்கள் கொடியில் இருக்கக்கூடிய அண்ணாவின் படத்தை எடுத்துவிட்டு அங்கே அமித்ஷாவின் புகைப்படத்தை வைத்தாலும், வைத்துவிடுவார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். பா.ஜ.க.வின் வேலையே ஒவ்வொரு மாநிலக் கட்சியாக விழுங்குவதுதான்.

இப்பொழுது பீகாரில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது. விரைவில், பீகாரில் நடந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நடக்கும், நிச்சயம் நடக்கும். இங்கு வந்திருக்கக்கூடிய அணி நிர்வாகிகள் உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது, நம்மிடம் நம் அரசின் சாதனைகள் இருக்கின்றன, திட்டங்கள் இருக்கின்றன.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிலும் நம் அரசின் திட்டங்களால் பயன்பெற்ற ஒரு பயனாளியாவது நிச்சயமாக இருப்பார்கள். அவர்களை சந்தித்துப் பேசுங்கள், மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த 40 நாட்களுக்குக் குறைந்தது ஒவ்வொரு நாளும் குறைந்தது 50 பேரைச் சந்தித்து நம் தேர்தல் பிரச்சாரத்தை செய்ய வேண்டும். உங்கள் கட்டுப்பாட்டில் 50 வாக்குகள் இருந்தால், உங்களின் உழைப்பை, உங்களின் வளர்ச்சியை யாராலும் தவிர்க்கவோ, தடுக்கவோ நிச்சயம் முடியாது. நம் கையில் இன்னும் 40 நாட்கள்தான் இருக்கின்றன. தேர்தல் வந்துவிட்டால், தி.மு.க. காரனை என்ன சொல்வார்கள்?

தீவிரமாகச் செயல்படுங்கள்

‘‘தேர்தல் வந்துவிட்டால் சிங்கிள் டீயைக் குடித்துவிட்டுத் தீயைப் போல வேலை செய்வான் தி.மு.க.காரன்’’ என்று சொல்வார்கள். அதை நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் வந்திருக்கிறது. உங்களுக்குள் பணிகளைப் பிரித்துக் கொள்ளுங்கள்.

இளைஞர் அணியினராகிய, நாங்கள் இளைஞர்களைச் சந்தித்து எங்களின் பிரச்சாரத்தை மேற்கொள்ள இருக்கிறோம். இளைஞர்களை ஈர்க்கின்ற வகையில், பல்வேறு பணிகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். அதேமாதிரி வந்திருக்கக்கூடிய மாணவர் அணியினர், மாணவர்களைச் சந்தித்து மாணவர்களுக்கு என்னவெல்லாம் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைப் பேசுங்கள்.

தகவல் தொழில்நுட்ப அணி, ஏற்கனவே நீங்கள் சமூக வலைதளங்களில் மிகவும் துடிப்பாக செயல்படுகிறீர்கள். இன்னும் தீவிரமாகச் செயல்படுங்கள். நீங்களே பேசிச் சின்னச் சின்ன வீடியோக்களைப் பதிவு செய்யுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் யூடியூப் சேனல் தொடங்குங்கள். நான் உங்கள் யாரையும் பொய்ச் செய்திகளைப் பரப்ப வேண்டும் என்று சொல்லவில்லை. நம்மிடம் உண்மையான வரலாறு இருக்கிறது. நம்மிடம் உண்மையான திட்டங்கள் இருக்கின்றன, பயனாளிகள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிச் சமூக வலைதளங்களில் பேசுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் ஊடகமாகச் செயல்பட வேண்டும். அதேமாதிரி சட்டத்துறை, தேர்தல் என்று வந்துவிட்டால், சட்டத்துறைதான் கழகத்துக்கு மிகப்பெரிய பலம். வேட்புமனுத் தாக்கல் முதல் வாக்கு எண்ணிக்கை வரை உங்களின் பணி எவ்வளவு முக்கியம் என்று அனைவருக்கும் தெரியும்.

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவைச் சேர்ந்தவர்கள், பா.ஜ.கவும் அடிமை அ.தி.மு.கவும் சிறுபான்மை மக்களுக்குச் செய்கின்ற துரோகத்தை மக்களிடம் கொண்டு சேருங்கள், மக்களிடம் பேசுங்கள். நம் சிறுபான்மையின மக்களுக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதை பற்றிப் பேசுங்கள்.

விவசாயத்துக்கு தனி பட்ஜெட்

மருத்துவ அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி இப்படி பல்வேறு அணிகள் இருக்கின்றன. நிச்சயம் உங்களுக்கு இருக்கக்கூடிய உங்கள் நண்பர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் அவர்களிடமெல்லாம் பேசுங்கள். விவசாய அணி, நம் அரசு விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைப் பற்றி பேசுங